9

# குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்

TML 009/**2014**

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



எல்லோரும் பெண்கள்.
ஒரே குடும்பச் சட்டம்.
அறியுங்கள் உங்கள் உரிமைகளை.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல்

*சட்டம்சார்ந்த விடயங்களின் அடிப்படை விளக்கத்தை உங்களுக்குத் தருவதே இந்தக் கையேட்டின் நோக்கமாகும். தனிப்பட்ட சட்டபூர்வ ஆலோசனையை மற்றும் உதவியை இது பிரதியீடு செய்யமாட்டாது. குடும்பச் சட்ட விவகாரங்களில் நீங்கள் சம்பந்தப்பட்டிருந்தால், உங்களுக்குள்ள தெரிவுகளை விளங்கிக்கொள்வதற்கும் உங்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் முடியுமான விரைவில் சட்டபூர்வ உதவியைப் பெற்றுக்கொள்வது சிறந்தது. மேலதிக தகவல்களுக்கும், ஆதாரவளங்கள் பற்றிய ஒரு பட்டியலுக்கும் எங்களுடைய இணையத்தளத்தை www.onefamilylaw.ca ல் பாருங்கள். எங்களுடைய இணையத்தளமான www.onefamilylaw.ca ல் "ஒரு சட்டத்தரணியைத் தேடல்" என்ற எமது இணையக் கருத்தரங்கைப் பார்ப்பதும் உங்களுக்கு உதவி செய்யலாம்.*

குடும்ப முறிவு பெண்களுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் கஷ்டத்தையும் மன அழுத்தத்தையும் தரும். நீங்களும் உங்களுடைய துணைவரும் பிரிந்தால், பல சட்டப் பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும். நிதி ஆதரவு, உங்களுடைய பிள்ளைகள் பற்றிய ஒழுங்குகள் மற்றும் உங்களுடைய குடும்பச் சொத்து பிரிப்பு போன்றவை பற்றி அநேகமாக நீங்கள் முடிவு எடுக்க வேண்டியிருக்கும். இவை சிக்கலான பிரச்சினைகள் ஆகும். சில தம்பதிகள் இவற்றைத் தாங்களாகவே கையாளக்கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால், அநேகமான சந்தர்ப்பங்களில், இந்த ஒழுங்குகளைக் கையாளுவதற்கு உங்களுக்கு கொஞ்சம் உதவி தேவைப்படும்.

**சட்டத்தரணி ஒருவரை நீங்கள் தேடுவதற்கு முன்னர்,** உங்களுடைய நிலைமை பற்றிச் சில பொதுவான சட்டபூர்வத் தகவல்களை முதலில் சேகரிப்பது பயனுள்ளதாக இருக்கலாம். உங்களுடைய சட்டபூர்வமான உரிமைகள், பொறுப்புக்கள் மற்றும் தெரிவுகள் பற்றி மேலும் நீங்கள் அறிவதற்கு உதவும் இலவசமான தகவல்களை கீழ்வரும் இணையத்தளங்கள் வழங்குகின்றன:

- **பெண்களுக்கான குடும்பச் சட்ட அறிவு** (FLEW)
  www.onefamilylaw.ca
- **குடும்பச் சட்டத் தகவல் நிகழ்வு** (FLIP)
  ஒன்ராறியோ சட்ட உதவியிலிருந்து கிடைக்கின்றது
  www.legalaid.on.ca

- **ஒன்ராறியோ சமூகச் சட்ட அறிவு** (CLEO)
  www.cleo.on.ca
- **உங்களுடைய சட்டபூர்வமான உரிமைகள்**
  www.yourlegalrights.on.ca
- **சட்ட மா அதிபரின் ஒன்ராறியோ அமைச்சு**
  www.attorneygeneral.jus.gov.on.ca

குடும்பச் சட்டம், நீதிமன்றச் செயல்முறை, நீதிமன்றப் படிவங்கள் மற்றும் சட்டத்தரணிகளுக்கான பரிந்துரைகளைப் பின்வரும் இடங்களிலும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்:

- **குடும்பச் சட்ட தகவல் நிலையங்கள்** (FLIC) – மாகாணம் முழுவதிலும் உள்ள குடும்ப நீதிமன்றங்களில் அமைந்துள்ளன.
- **குடும்பச் சட்ட, சட்ட உதவிச் சேவை நிலையங்கள்** (FLSC) – தற்போது Toronto, North York, Brampton, Newmarket, Sarnia, Windsor, Chatham, மற்றும் Welland ல் அமைந்துள்ளன.
- **குடும்பச் சட்ட, சட்ட உதவி அலுவலகங்கள்** – தற்போது Kenora, Ottawa, மற்றும; Thunder Bay ல் அமைந்துள்ளன.

இந்தச் சேவைகளில் சிலவற்றைப் பயன்படுத்துவதற்கு, சட்டத்தரணி ஒருவருக்கு பணம் கொடுப்பது உங்களுக்குக் கட்டுபடியாகாது என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டியிருக்கலாம். இந்தச் சேவைகள் பற்றிய மேலதிக தகவல்களுக்கும் உங்களுக்கு அருகேயுள்ள அமைவிடங்களைக் கண்டுபிடிப்பதற்கும், **ஒன்ராறியோ சட்ட உதவி** இணையத்தளத்தை **www.legalaid.on.ca** ல் பார்வையிடுங்கள் அல்லது **கட்டணமற்ற இணைப்பை 1-800-668-8258** ல் அழையுங்கள்.

## உங்களுக்கு எப்போது ஒரு சட்டத்தரணி தேவை எனத் தீர்மானித்தல்

எல்லா நிலைமைகளுக்கும் சட்டத்தரணி ஒருவர் தேவையில்லை, ஆனால் அநேகமான குடும்பச் சட்டப் பிரச்சினைகளுக்கு சட்டபூர்வ ஆலோசனை பெறுவது முக்கியமாகும். சட்டபூர்வமான ஆலோசனையை நீங்கள் பெறாவிட்டால்

உங்களுடைய சில முக்கிய உரிமைகளை, அவை உங்களுக்கு இருக்கின்றன என உங்களுக்குத் தெரியாமல் நீங்கள் இழக்கக் கூடும். உங்களுக்கு ஒரு குடும்பச் சட்ட சட்டத்தரணி தேவையா அல்லது தேவையில்லையா எனத் தீர்மானிக்கும் போது, பின்வரும் கேள்விகளைக் கருத்தில் கொள்ளுங்கள்:

- இந்த விடயம் எவ்வளவு முக்கியமானது? (உங்களுடைய பிள்ளைகளை அல்லது உங்களுடைய வீட்டை இழக்கும் ஆபத்து உங்களுக்கு உள்ளதா? உங்களுடைய துணைவர் உங்களைத் துன்புறுத்தியுள்ளாரா?)
- நீங்களும் உங்களுடைய துணைவரும் அமைதியாகவும் நியாயமாகவும் கதைக்க முடியுமா? (ஒரு பாரபட்சமற்ற தீர்வை உங்களுடைய துணைவருடன் நீங்கள் எடுக்கமுடியும் என நீங்கள் நினைக்கிறீர்களா?)
- உங்களுடைய துணைவருடன் சௌகரியமாகவும், பாதுகாப்பாகவும் தொடர்புகொள்ள முடியுமா?
- உங்களுடைய துணைவருக்கு சட்டத்தரணி ஒருவர் இருக்கின்றாரா?
- நீதிமன்றத்துக்குப் போக நீங்கள் விரும்புகிறீர்களா?
- ஒரு சட்டத்தரணியையின் சேவைகளைப் பெறுவதற்கு உங்களிடம் போதுமான பணம் உள்ளதா?
- சட்ட உதவிக்கு நீங்கள் தகுதியானவரா?
- ஒரு சட்டத்தரணி அல்லாத இன்னொருவர் உங்களுக்கு உதவ முடியுமா?
- ஒரு சட்டத்தரணி இல்லாமல் சில விடயங்களையும் சட்டத்தரணி ஒருவருடன் மற்ற விடயங்களையும் செய்ய உங்களால் முடியுமா?

## துணையைத் துன்புறுத்தல்

**உங்களுடைய உறவு துன்புறுத்துவதாய் இருக்குமாயின் அல்லது இருந்ததாயின், உங்களுக்கு உதவுவதற்குச் சேவைகள் உள்ளன.**

1. **தாக்கப்பட்ட பெண்களுக்கான உதவி இணைப்பை** நீங்கள் அழைக்கலாம்:
   - 416-863-0511 (ரொறன்ரோவில்)
   - 1-866-863-0511 (toll free)
   - 1-866-863-7868 (TTY line)

**24-மணித்தியால நெருக்கடி இணைப்பு ஒன்றும் உள்ளது,** அத்துடன் 150 க்கும் மேற்பட்ட மொழிகளில், கிழமையில் 7 நாட்களும் 24 மணி நேரமும் சேவைகள் கிடைக்கின்றன. ஒரு அவசரகால நிலையில், நகர்காவலரையும் நீங்கள் அழைக்கலாம் (அழுத்துங்கள் 911).

2. குடும்ப நீதிமன்றத்துக்கு நீங்கள் போகின்றீர்கள் ஆயின், **குடும்ப நீதிமன்ற ஆதரவுப் பணியாளர்கள்** உங்களுக்கு உதவ முடியும். வீட்டு வன்முறையிலிருந்து வெளியேறி குடும்ப நீதிமன்றச் செயல்முறைகளில் சம்பந்தப்பட்டுள்ளவர்களுக்கு குடும்ப நீதிமன்ற ஆதரவுப் பணியாளர்கள் உதவுவார்கள். நீதிமன்ற ஆதரவுப் பணியாளர் ஒருவர் பின்வருவனவற்றில் உதவலாம்:

- குடும்ப நீதிமன்றச் செயல்முறை பற்றிய தகவல்கள் வழங்கல்
- குடும்ப நீதிமன்றச் செயல்முறைகளுக்கு நீங்கள் தயாராவதற்கு உதவுதல்
- சமூகத்தில் உள்ள ஏனைய விசேடத்துவமான சேவைகளுக்கும் ஆதரவுகளுக்கும் உங்களைப் பரிந்துரைத்தல்
- நீதிமன்றத்துக்குப் பாதுகாப்பாகச் செல்லல் மற்றும் நீதிமன்றத்திலிருந்து பாதுகாப்பாக வெளியேறல் போன்றவற்றுக்கான பாதுகாப்புத் திட்டமிடலுக்கு உதவி
- சில வழக்குகளின் நீதிமன்றச் செயல்முறைகளுக்கு உங்களுடன் கூட வரல்.

குடும்ப நீதிமன்ற ஆதரவுப் பணியாளர் ஒருவரைக் கண்டுபிடிப்பதற்கு உங்களுக்கு உதவி தேவையாயின், **பாதிக்கப்பட்டவருக்கான ஆதரவு இணைப்பை** அழையுங்கள்:

- 416-314-2447 (ரொறன்ரோவில்)
- 1-888-579-2888 (toll free)

3. **உங்களுடைய உறவு துன்புறுத்துவதாய் இருக்கின்றது அல்லது இருந்தது என்றால், சட்டத்தரணி ஒருவருடன் கதைப்பது மிகவும் முக்கியமாகும்.**

## குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைத் தேடும் இடங்கள்

உங்களுக்குப் பொருத்தமான சட்டத்தரணியை நீங்கள் தெரிவுசெய்ய வேண்டும். இந்தக் கையேட்டிலுள்ள தகவல்கள், குறிப்பிட்ட எந்த சட்டத்தரணியையோ அல்லது சட்டபூர்வ சேவையையோ சிபாரிசு செய்யவில்லை. குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரையும் உங்களுக்குத் தெரியாவிடில், ஒருவரை நீங்கள் கண்டுபிடிப்பதற்கு உதவக்கூடிய சில இடங்கள் இதோ:

### 1. ஒன்ராறியோ சட்ட உதவி அமைப்பு (LAO)

சட்டத்தரணி ஒருவருக்குப் பணம் கொடுப்பது தங்களுக்குக் கட்டுபடியாகாது என்பதை நிரூபிக்கக்கூடிய ஒன்ராறியோ வாழ் மக்களுக்கு ஒன்ராறியோ சட்ட உதவி அமைப்பு, சட்டபூர்வமான உதவியை வழங்குகின்றது. எல்லா வகையான சட்டப் பிரச்சினைகளுக்கும், சட்ட உதவி அமைப்பு உதவி செய்ய முடியாது, ஆனால் பின்வரும் வழக்குகள் போன்ற சிக்கலான குடும்பச் சட்ட வழக்குகளுக்கு உங்களுக்கு உதவி கிடைக்கலாம்.

- பொறுப்பு, அணுகல், ஆதரவு அல்லது சொத்து சம்பந்தமான பாரதூரமான முரண்பாடுகள்
- பொறுப்பு, அணுகல் அல்லது ஆதரவுக் கட்டளைகளை மாற்றக் கோரும் சிக்கலான கோரிக்கைகள்

பிள்ளைப் பாதுகாப்பு வழக்குகளிலும் சட்ட உதவி அமைப்பு உதவியை வழங்குகின்றது.

ஒன்ராறியோ சட்ட உதவிக்கு விண்ணப்பிப்பதற்கு, **சேவைபெறுநர் சேவை நிலையத்தை 1-800-668-8258** ல் அழையுங்கள். 200 க்கும் மேற்பட்ட மொழிகளில் தகவல்கள் கிடைக்கின்றன. (சட்ட உதவிப் பத்திரங்கள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு கீழே பார்க்கவும்.)

#### a) வீட்டு வன்முறை

**வன்முறை அல்லது துன்புறுத்தலை** நீங்கள் அனுபவிப்பதுடன், உங்களுக்கு உடனடியாக சட்டரீதியான உதவி தேவைப்பட்டால், **குடும்ப வன்முறை**

**அதிகாரத் திட்டத்தின்** ஊடாக சட்டத்தரணி ஒருவருடனான இரண்டு மணி நேர இலவச கலந்தாலோசனையை நீங்கள் பெறமுடியும். சில பெண்கள் காப்பகங்கள், சமூக சட்ட மையங்கள், குடும்பச் சட்டச் சேவை நிலையங்கள் ஊடாகவும் மற்றும் **சட்ட உதவி அமைப்பின் சேவைபெறுநர் சேவை நிலையத்தை 1-800-668-8258** அழைப்பதன் மூலமும் இந்தச் சேவையைப் பெறலாம்.

உடனடி ஆபத்தில் நீங்கள் இல்லாவிட்டாலும் கூட, உங்களுடைய துணைவர் துன்புறுத்துபவராய் இருக்கின்றார் அல்லது இருந்தார் என்பதை சட்ட உதவி அமைப்புக்குச் சொல்வதைக் கருத்தில் கொள்வது முக்கியமாகும். உங்களுடைய தகவலை அந்தரங்கமானதாக வைக்கும் படி அவர்களை நீங்கள் கேட்கலாம்.

வீட்டு வன்முறைச் சூழல்களில், சட்ட உதவி பெறுவதற்கு நீங்கள் தகுதியானவரா என்பதைத் தீர்மானிக்கும் போது, சட்டத்தரணி ஒருவருக்கு உங்களால் பணம் செலுத்த முடியுமா என்பது பற்றிய அதன் விதிமுறைகளிலுள்ள அதனது கடுமையான போக்கை ஒன்ராறியோ சட்ட உதவி அமைப்பு தளர்த்தும். வன்முறை அல்லது துன்புறுத்தல் பற்றி அறிந்திருத்தல், உங்களுடைய சட்டரீதியான தேவைகள் பற்றி சட்ட உதவி மையம் நன்கு விளங்கிக்கொள்வதற்கு உதவிசெய்யும். அத்துடன் சட்டரீதியான உதவியை நீங்கள் விரைவாகப் பெற்றுக்கொள்ளவதற்கும் உதவலாம்.

**b) சட்ட உதவி அமைப்பின் சுருக்கமானஆலோசனைச் சேவைகள்**

உங்களுக்குக் குடும்பச் சட்டரீதியான பிரச்சினை ஒன்று இருப்பதுடன் உங்களுடைய வருமானம் ஒன்ராறியோ சட்ட உதவி அமைப்பின் குறைந்த வருமான விதிமுறைகளுக்குள் அடங்கியிருந்தால், சட்டத்தரணி ஒருவருடன் நீங்கள் தொலைபேசியில் 20 நிமிடங்கள் வரைக்கும் இலவசமாகக் கதைக்கக் கூடியதாக இருக்கலாம். உங்களுடைய சட்டரீதியான பிரச்சினையின் தரவுகளின் அடிப்படையில் சட்டத்தரணி ஒருவர் வழங்கும் பொதுவான அபிப்பிராயம் **சுருக்கமான ஆலோசனை** எனப்படும். உங்களுடைய சட்டரீதியான தெரிவுகள் பற்றி அந்தச் சட்டத்தரணி கலந்துரையாடுவதுடன் உங்களுடைய வழக்குக்கு

நீங்கள் எடுக்கக் கூடிய படிமுறைகள் பற்றி ஆலோசனைகள் தரலாம். அந்தச் சட்டத்தரணியை நீங்கள் நேரில் சந்திக்க மாட்டீர்கள் அத்துடன் சுருக்க ஆலோசனை தரும் சட்டத்தரணி உங்களை நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. ஒன்ராறியோ சட்ட உதவி அமைப்பினை **1-800-668-8258** ல் அழைப்பதன் மூலம் இந்தச் சேவையைப் பெறலாம். 200 க்கும் மேற்பட்ட மொழிகளில் உரைபெயர்ப்புச் சேவைகள் கிடைக்கின்றன. நீங்கள் அழைப்பதற்கு முன்னர் உங்களுடைய தரவுகள், பத்திரங்கள் மற்றும் கேள்விகளைத் தயாராக வைத்திருப்பது மிகவும் நல்லது.

## 2. சமூகச் சட்ட மையங்கள்

உங்களுடைய பகுதியிலுள்ள ஒரு குடும்பச் சட்ட சட்டத்தரணிக்கான பரிந்துரை ஒன்றை உங்களுக்கு உங்களுடைய சமூகச் சட்ட மையம் தரக்கூடியதாக இருக்கலாம். சில சமூகச் சட்ட மையங்கள் மட்டுப்படுத்தப்பட்ட சட்ட சேவைகளை வழங்குகின்றன. ஒன்ராறியோவில் 77 சமூகச் சட்ட மையங்கள் இருக்கின்றன, அவற்றில் 17 குறிப்பிட்ட குழுக்களுக்கு உதவுவதைக் குறிக்கோளாகக் கொண்ட விசேடமான சட்ட மையங்களாக உள்ளன. உங்களுக்கு அருகில் உள்ளதும் உங்களுக்கு மிகவும் பொருத்தமானதுமான மையத்தைக் கண்டறிவதற்கு ஒன்ராறியோ சட்ட உதவி அமைப்பின் பிரதான இணைப்பை **1-800-668-8258** ல் அழையுங்கள் அல்லது அவர்களின் இணையத்தளத்தை **www.legalaid.on.ca** ல் பார்வையிடுங்கள்.

## 3. JusticeNet

JusticeNet என்பது, சட்ட உதவிக்குத் தகுதியற்ற ஆனால் சட்டரீதியான ஆலோசனை தேவைப்படுபவர்களுக்கு உதவும் இலாப நோக்கமற்ற சேவை ஆகும். குறைந்த பணத்துக்கு வேலை செய்யக்கூடிய சட்டத்தரணி ஒருவரை நீங்கள் கண்டுபிடிப்பதற்கு துரளவஉைநநேவ உதவ முடியும். உங்களுடைய பகுதியிலுள்ள அவ்வகையான சட்டத்தரணியைக் கண்டுபிடிப்பதற்கு **www.justicenet.ca** எனும் இணையத்தளத்திலுள்ள வழிகாட்டியைப் பயன்படுத்துங்கள் அல்லது 1-866-919-3219 (toll free) ஐ அழையுங்கள்.

## 4. தனித்தியங்கும் குடும்பச் சட்ட சட்டத்தரணிகள்

தனித்தியங்கும் குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு உறவினரிடம், ஒரு நண்பரிடம் அல்லது சமூக முகவர் நிலையம் ஒன்றிடம் அல்லது பெண்கள் காப்பகத்தில் உள்ள ஆதரவுப் பணியாளரிடம் சிபாரிசு ஒன்றை நீங்கள் கேட்கலாம். நீங்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய, சௌகரியமாகச் சேர்ந்து வேலை செய்யக்கூடிய சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடிப்பது உங்களுடைய நோக்கமாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட சட்டத்தரணி ஒருவரை உங்களுடைய நண்பருக்குப் பிடித்திருக்கின்றது என்பதற்காகவோ அல்லது உங்களுடைய குடும்பத்தவர்கள் சிபாரிசு செய்தார்கள் என்பதற்காகவோ, அவர் உங்களுக்குப் பொருத்தமான சட்டத்தரணியாக இருப்பார் என்று சொல்ல முடியாது. தனித்தியங்கும் குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரை நீங்கள் கண்டுபிடிப்பதற்கு பின்வரும் சேவைகள் உதவலாம்:

- அரை மணி நேரக் கலந்தாலோசனையை இலவசமாக வழங்கக்கூடிய உங்களுடைய பகுதியிலுள்ள சட்டத்தரணி ஒருவரின் பெயரை **Upper Canada (LSUC) சட்ட சமூக சட்டத்தரணிப் பரிந்துரைப்புச் சேவை** உங்களுக்குத் தரலாம். இந்தச் சட்டத்தரணியின் சேவைகளைப் பெறுவதற்கு நீங்கள் முடிவு செய்யக் கூடும், ஆனால் நீங்கள் அப்படிச் செய்ய வேண்டும் என்றில்லை.
  - 416-947-3330 (ரொறன்ரோவில்)
  - 1-800-268-8326 (toll free)
- ஒன்ராறியோவில் சேவையாற்றும் சான்றிதழ் பெற்ற குடும்பச் சட்ட நிபுணர்களின் **Upper Canada (LSUC) சட்ட சமூக சட்டத்தரணி வழிகாட்டி www.lsuc.on.ca** ல் உண்டு.
- **கனடியக் குடும்பச் சட்ட சட்டத்தரணிகள் வலையமைப்பு** என்பது குடும்பச் சட்டத்தில் சேவையாற்றும் சட்டத்தரணிகளின் வலையமைப்பாகும். உங்களுடைய பெயரும் இலக்கமும் கிடைத்த 24 மணி நேரத்துக்குள் உங்களுடைய நகரத்திலுள்ள சட்டத்தரணி அங்கத்தவர் ஒருவர் உங்களை அழைப்பார். முதலாவது தொடர்புகொள்ளல் இலவசமானதும் அந்தரங்கமானதும் ஆகும். அந்தச் சட்டத்தரணியுடன் நீங்கள் கதைத்த பின்னர் அவரின் சேவைகளை நீங்கள் பெற விரும்புகிறீர்களா, இல்லையா

என்பதை நீங்கள் தீர்மானிக்கலாம், ஆனால் நீங்கள் அப்படிச் செய்ய வேண்டும் என்றில்லை. அவர்களுடைய **www.cflln.ca** இணையத்தளத்தில் நீங்கள் ஒரு கோரிக்கையை நிரப்பலாம் அல்லது 1-888-660-4869 (toll free) ஐ அழைக்கலாம்.

**5. துன்புறுத்தப்பட்ட பெண்களுக்கான உங்களுடைய உள்ளூர்க் காப்பகமும் உங்களுக்கு உள்ளூர்க் குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைப் பரிந்துரைக்கக் கூடியதாக இருக்கலாம்.**

## நீதிமன்றத்தில் உதவி பெறல்

குடும்பச் சட்டப் பிரச்சினை ஒன்றுக்காக நீங்கள் நீதிமன்றத்துக்குப் போகிறீர்கள் ஆயின், நீதிமன்றத்தில் சில சட்டரீதியான தகவல்களையும் ஆலோசனைகளையும் நீங்கள் பெறக்கூடியதாக இருக்கும்.

### 1. பணியிலிருக்கும் சட்டத்தரணி

சட்டத்தரணி ஒருவர் இல்லாமல், நீதிமன்றத்தில் நீங்கள் பிரசன்னமாக வேண்டியிருந்தால், அந்த நீதிமன்றத்தில் பணியிலிருக்கும் சட்டத்தரணி ஒருவரிடமிருந்து சட்ட ஆலோசனையை நீங்கள் இலவசமாகப் பெறக் கூடியதாக இருக்கும். சட்டத்தரணி ஒருவருக்கு பணம் கொடுப்பதற்கு உங்களுக்குக் கட்டுபடியாகாது என நீங்கள் நிரூபிக்க வேண்டியிருக்கலாம். அநேகமான குடும்ப நீதிமன்றங்களில் பணியிலிருக்கும் சட்டத்தரணிகள் இருப்பார்கள். அவர்கள், நீதிமன்றச் செயல்முறையை விளங்கபடுத்தலாம், நீதிமன்றத்துக்கு வேண்டிய பத்திரங்களை நீங்கள் தயார்செய்வதற்கு உதவலாம் அல்லது ஒப்பந்தம் ஒன்றை நீங்கள் பேரம் பேசுவதற்கு உதவலாம். சில நேரங்களில், பணியிலிருக்கும் சட்டத்தரணி, சின்ன விடயங்களுக்கு உங்களை நீதிமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியதாக இருக்கலாம்.

சில குடும்பச் சட்ட நீதிமன்றங்களில், சட்ட மாணவர்களிடமும் நீங்கள் உதவி பெற முடியும். நீதிமன்றப் பத்திரங்களை நிரப்புவதற்கு சட்டத்தரணி ஒருவர் இல்லாதவர்களுக்கு சட்ட மாணவர்கள் உதவ முடியும்.

## 2. கட்டாயமாகச் செல்லவேண்டிய தகவல் நிகழ்வுகள்

நீங்கள் அல்லது உங்களுடைய துணைவர் ஒரு குடும்ப வழக்கொன்றை ஆரம்பித்தால், அநேகமான நேரங்களில், நீதிமன்றச் செயல்முறைகளை விளங்கப்படுத்தும் மற்றும் பிரிவு மற்றும்.ஃஅல்லது விவாகரத்துக்கு ஊடாகச் செல்லும் குடும்பங்களுக்கான உள்ளூர் ஆதாரவளங்களை வழங்கும் தகவல் நிகழ்வு ஒன்றுக்கு நீங்கள் இருவரும் சமூகமளிக்க வேண்டும். ஒன்ராறியோ முழுவதும் உள்ள குடும்ப நீதிமன்ற வளாகங்களில் இந்தக் கட்டாயமாகச் செல்லவேண்டிய தகவல் நிகழ்வுகள் (MIPs) நடைபெறுகின்றன. இந்தத் தகவல், ஒன்ராறியோவின் சட்ட உதவி மையத்தின் குடும்பச் சட்ட தகவல் நிகழ்வில் (FLIP) இணையத்திலும் கிடைக்கின்றது **www.legalaid.on.ca**.

## 3. குடும்ப நடுநிலைமைச் சேவைகள்

துணைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் அவர்களின் நம்பிக்கைக்குரிய ஒரு மூன்றாம் ஆளான, நடுநிலைமையாளர் ஒருவரின் உதவியுடன், நீதிமன்றத்துக்கு வெளியே தங்களுடைய வேறுபாடுகளைத் தீர்ப்பதற்குத் துணைவர்கள் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு வழியாக நடுநிலமை வகித்தல் உள்ளது. ஒன்ராறியோ முழுவதும் உள்ள அனைத்துக் குடும்ப நீதிமன்றங்களில் குடும்ப நடுநிலைமையாளர்களை அரசாங்கம் வழங்குகின்றது. இந்தச் சேவைகள் நீதிமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்பட்ட வழக்குகளுக்கு அதே நாளில் இலவசமாகக் கிடைக்கும்.

சட்ட உதவி மையத்தின் விதிமுறைக்கேற்ற குறைந்த வருமானமுள்ளவராக நீங்கள் அல்லது உங்களுடைய துணைவர் இருந்தால் ஒன்ராறியோ சட்ட உதவி மையமும் இலவச நடுநிலைமைச் சேவைகளை வழங்கும். சட்ட உதவி மையத்தின் இலவச நடுநிலைமைச் சேவைகளை, சில நீதிமன்றங்கள், குடும்பச் சட்ட சேவை மையங்கள் மற்றும் குடும்பச் சட்டத் தகவல் மையங்களில் நீங்கள் கேட்க முடியும்.

நடுநிலைமையாளர் ஒருவருக்கு உங்களால் பணம் செலுத்த முடியுமென்றால், தனித்தியங்கும் பல நடுநிலைமைச் சேவைகளைப் பெறமுடியும்.

**உறவு ஒன்றில் துன்புறுத்தல் இருக்கிறது அல்லது இருந்தது என்றால் நடுநிலைமை எப்போதும் சிறந்த வழியாக இருக்க மாட்டாது.**

நடுநிலைமை பற்றிய மேலதிக தகவல்களுக்கு, "முரண்பாட்டுக்கான மாற்றுத் தீர்மானமும் குடும்பச் சட்டமும்" நீங்கள் வாசிக்க விரும்பலாம் அல்லது இணைய கருத்தரங்கில், "முரண்பாடு, நீதிமன்றமா அல்லது வேறு வழியா?: குடும்ப முரண்பாட்டைத் தீர்க்க வேறு வழிகள்", பார்க்க விரும்பலாம், இரண்டும் FLEW இணையத்தளத்தில் www.onefamilylaw.ca.

## உங்களுடைய குடும்பச் சட்ட சட்டத்தரணிக்கு எவ்வகையில் பணம் செலுத்தலாம்

### 1. ஒன்ராறியோ சட்ட உதவி மையம் (LAO) — பத்திரங்கள்

சட்டத்தரணி ஒருவரின் சேவைகளைப் பெறுவதற்குப் பணம் செலவாகும், சட்டத்தரணி ஒருவருக்குப் பணம் செலுத்துவது உங்களுக்கு கட்டுபடியாகாது ஆயின், ஒரு சட்டத்தரணிக்குப் பணம் செலுத்துவதற்கு ஒன்ராறியோ அரசாங்கம் உங்களுக்கு உதவி செய்யலாம். சில குடும்பச் சட்டப் பிரச்சினைகளுக்காக, ஒரு சட்டத்தரணியின் சேவைகளைப் பெறுவதற்கான **சட்ட உதவிப் பத்திரம்** ஒன்றுக்கு நீங்கள் ஒன்ராறியோ சட்ட உதவி மையத்துக்கு (LAO) விண்ணப்பிக்கலாம்.

குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்கு உங்களைப் பிரதிநிதிப்படுத்துவதற்காக அந்தச் சட்டத்தரணிக்குச் சட்ட மையம் பணம் செலுத்தும் என்பதை உத்தரவாதப்படுத்தும் பற்றுச்சீட்டு (உறுதிமொழி) ஒன்று. பத்திரம் எனப்படும். மணித்தியாலங்களின் அளவு உங்களுக்கு எவ்வகையான சட்ட உதவி தேவைப்படுகின்றது என்பதில் தங்கியிருக்கும், அத்துடன் அந்தப் பத்திரத்தில் அது குறிப்பிடப்பட்டிருக்கும் (சில வேளைகளில் மேலதிக மணித்தியாலங்கள் சேர்க்கப்படலாம்). சில வேளைகளில், நீங்கள் பணத்தை மீள அவர்களுக்குச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒன்ராறியோ சட்ட உதவி மையம் உங்களுக்கு ஒரு பத்திரத்தைத் தரும்.

சட்ட உதவிப் பத்திரம் ஒன்றுக்கான, ஒன்ராறியோ சட்ட உதவி மையத்தின் விதிகளுக்கமைய நீங்கள் இருந்தால், நீங்கள் விரும்பும் சட்டத்தரணி ஒருவரின் சேவைகளைப் பெறுவதற்கு இந்தப் பத்திரத்தை நீங்கள் பயன்படுத்தலாம். சட்டத்தரணிகள் எல்லோரும் சட்ட உதவிப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதில்லை. ஒரு நியமனத்துக்காக நீங்கள் அழைக்கும் போது அந்தச் சட்டத்தரணி சட்ட உதவி வேலைகள் செய்கின்றவரா எனக் கேட்பதை உறுதிப்படுத்துங்கள்.

**உங்களுடைய துணைவர் உங்களைத் துன்புறுத்தியிருந்தால் அல்லது உங்களுக்கு அடாவடித்தனம் செய்திருந்தால்**, இரண்டு மணிநேர இலவச சட்ட உதவிக்கான சட்ட உதவிப் பத்திரம் ஒன்றை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் பத்திரத்தைப் பெறுவதற்கு, நீங்கள் குறைந்த வருமானமுள்ளவர் என நீங்கள் நிரூபிக்கத் தேவையில்லை.

சில சமூக சேவை நிலையங்கள், பெண்கள் காப்பகங்கள், குடும்பச் சட்ட சேவை நிலையங்களில் அல்லது நேரடியாக சட்ட உதவி மையத்தை அழைப்பதால் பெறக்கூடிய "**குடும்ப வன்முறை அதிகார ஆலோசனைச் சட்டத்தரணி**" **(Advice Lawyer Family Violence Authorization)** எனப்படும் பத்திரம் ஒன்றை நீங்கள் நிரப்ப வேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு அல்லது சட்ட உதவிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதாவதொரு குடும்பச் சட்ட சேவை சட்ட உதவி நிலையங்களில் நேரடியாக விண்ணப்பியுங்கள் அல்லது அவர்களுடைய இணையத்தளத்தை **www.legalaid.on.ca** ல் பார்வையிடுங்கள், அல்லது அழையுங்கள்:

- 416-979-1446 (ரொறன்ரோவில)
- 1-800-668-8258 (toll free)
- 1-866-641-8867 (for TTY)

### 2. தனித்தியங்கும் சட்டத்தரணிகள்

உங்களிடம் ஒரு சட்ட உதவிப் பத்திரம் இல்லை அத்துடன் சட்டத்தரணி ஒருவரின் கட்டணத்தை நீங்கள் செலுத்துகிறீர்கள் என்றால் அந்தச் சட்டத்தரணி உங்களிடம் எப்படிக் கட்டணம் அறவிடுவார் என்பதை நீங்கள் விளங்கிக்கொள்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது மிகவும் முக்கியமாகும். அந்தச் சட்டத்தரணி உங்களிடம் எவ்வளவு கட்டணம் அறவிடுவார், உங்களுடைய வழக்குக்கு கிட்டத்தட்ட எவ்வளவு செலவாகும் மற்றும் வேறுபட்ட கட்டணத் தெரிவுகள் இருக்கின்றனவான என்பவற்றை, நீங்கள் ஒன்றாகச் செயற்படத் தொடங்க **முன்னர்** கலந்தாலோசிப்பதை உறுதி செய்யுங்கள். பொதுவாக, சட்டத்தரணி ஒருவரின் **கட்டணங்கள்**, அந்தச் சட்டத்தரணியின் நேரம் மற்றும் உங்களுடைய வழக்குடன் சம்பந்தமான பிரதியெடுத்தல் மற்றும் நீதிமன்றச் செலவுகள் போன்ற வேறு செலவுகளின் சேர்க்கையாக இருக்கும் **(கொடுப்பனவுகள்)**.

எந்த நேரத்திலும் உங்களுடைய கட்டணச் சீட்டின் விபரங்கள் பற்றிக் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. உங்களின் வழக்கு நடக்கும் போது அந்தச் சட்டத்தரணி உங்களிடம் எப்படிக் கட்டணம் அறவிட்டுள்ளார் மற்றும் எப்போது நீங்கள் பணம் செலுத்தவேண்டும் என்பவற்றை அடிக்கடி கேட்பது நல்லது. நீங்கள் குறைந்த வருமானம் உள்ள ஒருவரானால் வருமானத்துக்கேற்ற அளவில் "sliding scale." இகட்டணம் அறவிடுவதற்கு, அதாவது குறைந்த கட்டணத்துக்கு வேலை செய்வதற்குச் சில சட்டத்தரணிகள் ஒத்துக்கொள்வார்கள்.

## சட்டத்தரணி ஒருவரில் எதிர்பார்க்க வேண்டியவை

புதிய சட்டத்தரணி ஒருவரை நீங்கள் அழைக்கும் போது, குடும்பச் சட்டத்தில் அவருக்கு அனுபவம் இருக்கின்றதா எனக் கேட்பதை உறுதிசெய்யுங்கள். சட்டத்தரணி ஒருவரில் பின்வருவனவற்றை எதிர்பார்ப்பதும் முக்கியமாகும்:

- நீங்கள் துன்புறுத்தப்பட்டிருந்தால் வீட்டு வன்முறையில் அனுபவம்
- கவனமாகக் கேட்டல்
- உங்களுக்கு விளங்கக்கூடியதாக விடயங்களை விளங்கப்படுத்தல்
- உங்களுடைய கேள்விகளுக்குப் பதில் அளித்தல்

- உங்களுடைய குடும்பப் பிரச்சினை பற்றிய உங்களுடைய விருப்பங்களையும் கருத்தில் கொண்டு ஆலோசனை வழங்கல்
- ஆதரவுக்காக உங்களுடன் இன்னொருவரை நீங்கள் அழைத்து வருவதில் அவருக்கு பிரச்சினை இல்லாதிருத்தல்
- உங்களுக்குத் தேவையானால், உரைபெயர்ப்பாளர் ஒருவரைக் கண்டுபிடிக்க உதவுதல்
- அவசரப்படுத்துவது போல் உங்களை உணரப் பண்ணாமல் இருத்தல்
- ஒரு சில நாட்களுள் உங்களுடைய அழைப்புக்கு பதிலளித்தல்
- கட்டணம் அறவிடுவது பற்றித் தெளிவாயிருத்தல்
- சட்ட உதவிப் பத்திரம் ஒன்று உங்களிடம் இருந்தால், அதை ஏற்றுக்கொள்ளல்
- உங்களுடைய வலுவிழப்புக்கு வசதி செய்தல்
- நீங்கள் கேட்டால், சட்ட அலுவலகத்துக்கு வெளியே உங்களைச் சந்தித்தல்
- தேவைப்பட்டால், அலுவலகத்துக்கு உங்களுடைய பிள்ளைகளைக் கூட்டி வர அனுமதித்தல்

உங்களுடைய சட்டத்தரணியுடனான உங்களுடைய தொலைபேசி அழைப்புக்களுக்கும் சந்திப்புக்களுக்கும் தயாராகவும் ஏற்பாட்டுடனும் இருக்கவேண்டும் என்பதை நினைவில் வைத்திருங்கள். கேள்விகள் கேட்பதுடன் அந்தப் பதில்கள் உங்களுக்கு விளங்குவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். முக்கியமான விடயங்களை நினைவில் வைத்திருக்க உதவுவதற்கு குறிப்புக்கள் எடுக்க நீங்கள் விரும்பலாம் அல்லது அந்தச் சட்டத்தரணியின் அலுவலகத்துக்கு உங்களுடன் போவதற்கு நீங்கள் நம்பும் ஒருவரைக் கேட்க விரும்பலாம். அந்த நபரின் முன்னால் எல்லாவற்றையும் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் கதைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன் அந்த நபர் உங்களுடைய தகவல்களை இரகசியமாக வைத்திருப்பார் என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரிய வேண்டும்.

உங்களுடைய சட்டத்தரணி உங்களிடம் நிறையக் கேள்விகள் கேட்பதற்குத் தயாராக இருங்கள். உங்களுடைய சட்டத்தரணியுடன் நேர்மையாக இருப்பது முக்கியமாகும். உங்களுடைய துணைவர் எப்போதாவது உங்களைத் துன்புறுத்தியிருந்தால் அல்லது உங்களுக்கு அடாவடித்தனம் செய்திருந்தால் அதை அவருக்கு நீங்கள் சொல்ல வேண்டும். முடியுமானளவுக்கு உங்களுடைய நிலைமை பற்றிய அதிக தகவல்களை நீங்கள் கொடுத்தால் உங்களுடைய சட்டத்தரணியால் உங்களுக்கு சிறப்பாக உதவி செய்யக் கூடியதாக இருக்கும்.

உங்களுக்கு அதிகளவு சௌகரியம் பிரெஞ் மொழியில் இருந்தால், FLEW இணையத்தளமான www.onefamilylaw.ca ல், **"பிரெஞ் மொழிச் சேவைகளும் குடும்பச் சட்டமும்"** வாசிக்க அல்லது **www.undroitdefamille.ca** இணையத்தளத்தில் Femmes ontariennes et droit de la famille (FODF) பார்வையிட நீங்கள் விரும்பலாம்.

Ontario

The Law Foundation of Ontario
Building a better foundation for justice in Ontario

- *இதில் சொல்லப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் FLEW ன் அபிப்பிராயங்கள் ஆகும். இவை மாகாணத்தின் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.*
- *Law Foundation of Ontario நிதி உதவி அளிக்கும் அதே வேளையில் இந்த வெளியீட்டின் உள்ளடக்கம், Foundation ன் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.*

*நெருக்கமான உறவு ஒன்று முறியும் போது வன்முறைக்கான ஆபத்து அதிகளவில் உண்டு. உங்களுக்கு உடனடி ஆபத்து இருந்தால், 911 ஐ அழையுங்கள். நீங்களோ உங்களுக்குத் தெரிந்தவரோ ஆபத்தில் இருந்தால் உதவி பெறுவது பற்றிய தகவல்களுக்கு FLEW இணையத்தளத்தைப் பார்வையிடுங்கள்.*

*ஒன்ராறியோவில் வாழும் பிரெஞ் பேசும் பெண்ணாக நீங்கள் இருந்தால், குடும்ப சட்ட நீதிமன்ற செயல்முறைகளின் போது பிரெஞ் மொழிச் சேவைகளை அணுகுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. உங்களுடைய உரிமைகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு, ஒரு சட்டத்தரணியை, ஒரு சமூக சட்ட மையத்தை அல்லது Femaide ஆதரவு இணைப்பை 1-877-336-2433, TTY 1-866-860-7082 ல் தொடர்பு கொள்ளுங்கள்.*

*பிரெஞ்சில் சேவைகளை எப்படி அணுகுவது என்பது பற்றிய மேலதிக விபரங்களை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca ல் நீங்கள் பார்க்கலாம்.*

## பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம (TML 007)
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. **குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)**
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்தக் கையேடு பல வடிவங்களிலும் மொழிகளிலும் கிடைக்கின்றது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து www.onefamilylaw.ca ஐப் பார்வையிடுங்கள். உங்களுடைய குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் விளங்கிக்கொள்வதற்கு உதவும் மேலதிக விடயங்களையும் இந்த இணையத்தளத்தில் நீங்கள் பார்க்கலாம்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir